இலாபங்களைக் கொண்டிருக்கும் அடிப்படை நுகர்வுப் பொருட்களின் பகிர்ந்தளிப்புக்களைக் கையாண்டது. மத்திய வங்கியின் அளவீட்டினைக் கொண்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கூட்டுறவு நிலையங்களின் மொத்த விற்பனை 1982 இன் ரூ. 83,200 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ. 93,000 இலட்சங்களுக்கு அதிகரித்திருந்தபோதும், அவற்றின்மொத்த இலாபம் 1982இன் 6சதவீதத்திலிருந்து 1983இல் 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இச்சிறிய இலாபம் அதிகரித்த போக்குவரத்துச் செலவு மற்றும் நிருவாகச் செலவுகளை ஈடுசெய்வதற்கு மிகக் குறைவாக இருந்தமையினால் இவ்வாண்டுக் காலத்தில் கூட்டுறவுத்துறை கடுமையான நிதி இடர்பாடுகளை எதிர்நோக்கியது. உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சதுசல மற்றும் மக்கள்வங்கி ஆகியவற்றிலிருந்து கொடுகடன் வசதி கிடைக்கத்தக்கதாயிருந்தும் இவ்விடர்ப்பாடுகாணப்பட்டது. 1983 ஆம் ஆண்டுப் பகுதியில் கூட்டுறவு நிலையங்களின் சில்லறை வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை 7,690 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஊழியர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 45,000 ஆகவே காணப்பட்டது.

தேசிய பகிர்ந்தளிப்பு முறையில் இன்றியமையாத பங்கினை வகிக்கும் கூட்டுறவுத்துறையின் முக்கியத்துவத்தை 1983 யூலை கலவர காலத்தில் காணக்கூடியதாகவிருந்தது. கூட்டுறவுநிலையங்கள் அடிப்படை நுகர்வு, மற்றும் இன்றியமையாத பொருட்களின் பற்றுக் குறையை நீக்குதல் அவற்றின் சமமான பங்கீடுகளை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் பெறுமதி மிக்க பங்கினை ஆற்றியது. இக்காலப்பகுதியில் விரைவான விரிவாக்கம், பகிர்ந்தளிப்புக்குச் செறிவாக்கியமை, சந்தைப்படுத்தலைப் பரவலாக்கியமை ஆகியவற்றின் மூலமாக கூட்டுறவுத்துறை நுகர்வோருக்கு வழங்கிய பணி தாராளமாக்கப்பட்ட பொருளாதாரக் கருத்திலும் கூட மிக முக்கியமானதொன்றாகவே காணப்படுகின்றது. இச் சூழ்நிலைகளில்போதுமான பயிற்சிகள், வர்த்தக ரீதியில் ஆற்றல்வாய்ந்தனவாக மாற்றுவதற்கான ஊக்குவிப்புக்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் அவற்றின் செயலாற்றத்தை வசதிப்படுத்தி முன்னேற்றுவதற்கான தேவை ஒப்புதல்களைப் பெறவேண்டும்.

## சுற்றுலா

1983இல் சுற்றுலாத்துறை வீழ்ச்சியைக் கண்டுள்ளவேளையில் இது முக்கியமாக அதன் கட்டுப்பாட்டுக்கு உட்படாத காரணிகளின் விளைவாக விளங்கியது. சுற்றுலா வருகைகளின் எண்ணிக்கை வருவாய்கள், விடுதி ஏற்பாடு அல்லது தொழில்நிலை போன்ற குறிகாட்டிகளின் நியதிகளில் நோக்கும்போது 1983இல் இத்துறையின் செயலாற்றம் வழமைக்கு மாறானதாக விளங்கியது. குறைந்த மட்ட நடவடிக்கைக்கான மிக முக்கிய வெளிப்படையான காரணம் யூலைக் கலவரங்களேயாகும். அத்துடன் மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார நிலைமை (சுற்றுலாப்பயணிகளை உருவாக்கும் மிக முக்கிய சந்தை) இன்னமும் மந்தமாகவேயிருந்தது. அதற்குக் காரணம் பல நாடுகள் மந்தமாகவிருந்து மீள்நிலைக்குத் திரும்பும் நிலையிலிருந்ததன் காரணமாக இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் எதுவும் கிடையாமல் போனமையாகும்.

1983இல் சுற்றுலாத்துறையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் இலங்கைக்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலில் ஆறாவதாக விளங்கியது. 1982இல் இது நாலாவது இடத்தில் விளங்கியது. 1983இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை 337,342 ஆக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்து வந்தாலும் சுற்றுலாப் போக்குவரத்து வளர்ச்சியில் காணப்பட்ட சாதகமான போக்கு 1971இன் பின் முதன்முதலாக இவ்வாண்டிலேயே மாற்றமடைந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1983இன் முதல் ஆறு மாதங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 10 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் பின்னைய ஆறு மாதங்களிலும் 45 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து பயணிகளின் வருகையில் யூலை கலவரத்தின் பாதிப்பை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. எனினும், 1983 யூனின் வருகைகள் 1982இன் இதே மாதத்தின் வருகைகளைவிடக் குறைவானதாக விளங்கியதும் குறிப்பிடத்தக்கதொன்றாக விளங்குவதுடன் இது இந்திய அரசு அந்நாட்டினருக்கு வழங்கும் தீர்வையற்ற படியில் கட்டுப்பாடுகளை விதித்ததன் விளைவாக இந்தியாவிலிருந்து வருபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் விளைவால் ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பா, அவுஸ்ரலாசியா ஆகியவற்றிலிருந்தான வருகைகள் இவ்வாண்டில் அதிகூடிய எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்து முறையே 24 சதவீதத்தாலும் 22 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. ஆசியாவிலிருந்தான வருகைகள் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இது முக்கியமாக இந்திய சுற்றுலாப்பயணிகளின் 6 சதவீத வீழ்ச்சியின் விளைவாகும். வட அமெரிக்காவிலிருந்தான வருகைகள் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. எனினும், மீளாய்வின் கீழான ஆண்டில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் 7 சதவீதத்தால் அதிகரித்தன. 1983இல் ''இன்பப் பயணிகளின்'' வருகை (இடைப்போக்கிலுள்ள பயணிகள் நீங்கலாக நாட்டில் 24 மணித்தியாலங்களுக்கு குறைவாக தங்கும் தற்காலிக வருகையாளர்கள்) 8,836 ஆக விளங்கி 1982இன் 6,632உடன் ஒப்பிடுகையில் 33 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன.

அட்டவணை 1.40

**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1982 — 1983**

| விடயம் | 1982 | % மாற்றம் 1981 மேல் | 1983 | % மாற்றம் 1982 மேல் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ... | 407,230 | 9.8 | 337,342 | — 17.2 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் .. | 6,632 | —14.3 | 8,836 | 33.2 |
| 3. பயணி இரவுகள் ['000] ... | 4,048 | 3.6 | 3,373 | — 16.7 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூ. பத்து இலட்சங்களில் ... | 3,050.4 | 19.8 | 2,560.0 | — 16.1 |
| 4.2 டொலர் பத்து இலட்சம் ... | 146.6 | 10.7 | 116.0 | — 20.9 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சங்களில் ... | 132.8 | 18.2 | 101.7 | — 23.4 |
| 5. நோக்கங்களின்பயபான வருவாய்களின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் .. | 361,190 | 8.9 | 306,824 | — 15.0 |
| 5.2 தொழில் சம்பந்தமானவை .. | 27,484 | 11.5 | 17,022 | — 38.1 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா .. | 232,290 | — 5.5 | 176,668 | — 23.9 |
| 6.2 ஆசியா ... | 135,088 | 52.2 | 124,564 | — 7.8 |
| 6.3 வட அமெரிக்கா ... | 15,528 | 11.3 | 14,740 | — 5.1 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 64,262 | 16.3 | 53,608 | — 16.6 |
| 7.1 நேரடியாக ... | 26,776 | 16.3 | 22,374 | — 16.4 |
| 7.2 மறைமுகமாக ... | 37,486 | 16.3 | 31,234 | — 16.7 |

மூலம்: இலங்கைச சுற்றுலா சபை.

சந்தைப்பங்குகளைப் பொறுத்தமட்டில், மேற்கு ஐரோப்பா இன்னமும் அதி கூடிய பங்கிற்கு வகைகூறியபோதிலும் 1982இல் அதன் சந்தைப்பங்கான 57 சத வீதத்திலிருந்து 1983இல் 52 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது, ஆசியா 1983இல் அதன் சந்தைப்பங்கை 1982இன் 33 சதவீதத்திலிருந்து 40 சதவீதத் திற்கு உயர்த்திக்கொண்டது. இதற்கு முக்கியமாக 1982இல் 23 சதவீதமாக விளங்கிய இந்திய சுற்றுலாப்பயணிகளின் பங்கு 1983 இல் மொத்த வருகைகளில் 27 சதவீதத்திற்கு வகைகூறியமை காரணமாகும். அவுஸ்திரலாசியா தவிர்ந்த ஏனைய எல்லாப் பிராந்தியங்களும் 1983இல் அவற்றின் சந்தைப்பங்குகளை அதி கரித்தன. எனினும் ஆண்டில் நிலவிய பாதகமான நிலைமைகள் காரணமாக இப்பங்குகள் நீண்டகால போக்குகளை குறிப்பனவாக கொள்ளமுடியாது.

செப்பமற்ற வருகைப்புள்ளி விபரங்களைப் பார்க்கிலும் சுற்றுலாப் போக்கு வரத்தின் அளவிற்கான கூடிய திறமையான குறிகாட்டியாக கருதப்படும் சுற்றுலா இரவுகளின் (சுற்றுலாப்பயணிகளின் மொத்த எண்ணிக்கையை இலங்கையில் தங்கும் சராசரிக் காலத்தினுல் பெருக்கிவருவது) மொத்தத்தொகை 1982இன் 4,048,409 உடன் ஒப்பிடுகையில் 1983இல் 3,373,420 ஆக விளங்கி 17 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 1983இல் இலங்கையில் தங்கியிருக்கும் சராசரிக் காலம் முன்னைய ஆண்டினைப்போலவே 10 இரவுகளாக விளங்கின.

சுற்றுலாப்பயணிகளின் வருகைக்கான முக்கிய நோக்கம் 1983இலும் கேளிக் கைக்காக தொடர்ந்தும் விளங்கியது. 1982இன் 89 சதவீதத்துடன் ஒப்பிடுகை யில் 1983இல் மொத்த வருகைகளில் 91 சதவீதத்திற்கு வகைகூறிற்று. 1982ஐப் போலவே 1983இலும் இலங்கைக்கான முக்கிய போக்குவரத்து வகையாக வான் மூல வருகையே விளங்கியது.

ஒவ்வொரு ஆண்டிலும் மொத்தப் போக்குவரத்தில் ஏறத்தாழ 87 சதவீதத் திற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்புக்களும் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்களும் வகைகூறின. ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்களில் வருவோர் களின் எண்ணிக்கை 1982இன் 16 சதவீதத்திலிருந்து 1983இல் மொத்த வான் பயணிகளின் 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இது யூலைக் கலவரத்தினைத் தொடர்ந்து கூட்டுப்பயணங்களை கணிசமானளவில் ரத்துச் செய்ததே காரண மாகும்.

1983இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய் 25,600 இலட்சங்களாக மதிப்பிடப்பட்டதோடு இது 1982இன் வருவாயுடன் ஒப்பிடுகையில் 16 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. சி.எ.உ. நியதிகளில் 1982 உடன் ஒப்பிடுகையில் 1983இல் வருவாய் 23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

சுற்றுலாத்தொழில் ஊக்குவிப்பு கைத்தொழிலாக விளங்கி நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. எனினும் ஆண் டின் இறுதி அரைப்பகுதியில் வருகைகளின் வீழ்ச்சியால் இக்காலத்தில் சுற்றுலாத் துறையில் தொழில் வாய்ப்பு பாதிப்படைந்தது. நேரடித் தொழில் வாய்ப்பு 1982இன் 26,776 இலிருந்து 1983இல் 22,374 ஆக வீழ்ச்சியடைந்தது. சுற்றுலாத் துறையில் மறைமுகமாக தொழிலில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை முன்னைய

ஆண்டின் 37,486 உடன் ஒப்பிடுகையில் 1983இல் 31,234 என மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் குறைந்தமட்ட நடவடிக்கைகளின் விளைவால் சுற்றுலாக்கைத்தொழிலில் நேரடியாகத் தொழிலில் ஈடுபட்டுள்ள அமைய தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தற்காலிகமாக தொழிலில் இருந்து நிறுத்தப்பட்டனர். எனினும், சுற்றுலாத்துறையில் மறைமுகமாக ஈடுபட்டுள்ளோரே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறையின் கொள்ளளவை 1982இன் 123 அலகுகளிலிருந்து 1983இல் 136 அலகுகளாக அதிகரித்து மொத்த அறைகளின் எண்ணிக்கையை 7,539 இலிருந்து 8,643 ஆக அதிகரித்தது. எனினும், 1983இல் அறையில் தங்குவோர் வீதம் 1982இன் 47.8 சதவீதத்திலிருந்து 35.9 சதவீதமாக அதிகளவால் வீழ்ச்சியடைந்தது. 1983இன் முதல் ஆறு மாதங்களுக்குமாக விடுதியில் தங்குவோர் வீதம் 1982இன் இதே காலத்தில் பதிவுசெய்யப்பட்ட 50.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 47.0 சதவீதமாக குறைந்து விளங்கியது. 1980இலிருந்தும் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்தபோதிலும் தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறையில் அறையில் தங்குவோர் வீதம் உறுதியாக வீழ்ச்சியைக் கொண்டுள்ளது. இது சுற்றுலாப்பயணிகள் தரப்படுத்தப்படாத துறையிலேயே வதிவிடங்களைத் தேடுவது அதிகரித்துச் செல்வதைக் காட்டுகிறது.

தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறையில் அறையில் தங்குவோரின் பிராந்திய வகைப்படியான பகுப்பு கொழும்பு மாநகரத்திலும் கொழும்புப் பெரும்பாகப் பகுதிகளிலும் அதிகூடியதாக முறையே 52 சதவீதமாகவும் 40 சதவீதமாகவும் விளங்கின. அதிகூடிய கொள்ளளவைக்கொண்ட தெற்குக் கரையோரப் பகுதி 33 சதவீத அறையில் தங்குவோர் விகிதத்தைக் கொண்டிருந்தது. கிழக்குக் கரையோரம், மலைநாடு, புராதனநகர் பிரதேசங்கள் ஏறத்தாழ 30சதவீதமளவில் அறையில் தங்குவோர் வீதத்தைக் கொண்டிருந்தன. வடபகுதி அதிகுறைந்த அறையில் தங்குவோர் வீதமாக 11 சதவீதத்தைக் கொண்டிருந்தது. அறையில் தங்குவோர் வீதத்தை ஆண்டுக் காண்டு அடிப்படையில் ஒப்பிடும்போது வடக்குப் பகுதியும் கிழக்குக் கரையோரப்பகுதியுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. 1983இல் அறையில் தங்குவோர் வீதம் 45 சதவீதத்தாலும் 36 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு இப்பிரதேசங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல விரும்பாததுடன் பாதுகாப்புப் பிரச்சினைகளும் இணைந்தமை காரணங்களாக இருக்கலாம். தெற்குக் கரைப்பகுதியிலும் புராதன நகர் பகுதியிலும் அறையில் தங்குவோர் வீதம் முறையே 30 சதவீதத்தாலும் 20 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதால் 1983 இப்பகுதிகளுக்கு சாதகமற்ற ஆண்டாக விளங்கியது. தரப்படுத்தப்பட்ட விடுதிகளில் குறிப்பாக தென்கரையோரத்தில் அறைகளின் எண்ணிக்கை திட்டமிடப்படாது அதிகரிக்கப்பட்டதனுலும் இப் பிரச்சனை மேலும் சிக்கலானது. கடந்த சில ஆண்டுகளாக விடுதியில் தங்கும் போக்கு வீழ்ச்சியடைவதை நோக்கும்போது விரிவாக்கல் திட்டங்கள் திறமையாக மதிப்பிடப்பட்டதொன்ருக கருதப்படமுடியாது. 1983இல் அறையில் தங்கும் வீதங்கள் மலைநாடு, கொழும்பு பெரும்பாகம், கொழும்பு மாநகரம் ஆகியவற்றில் முறையே 21 சதவீதத்தாலும், 19 சதவீதத்தாலும், 17 சதவீதத்தாலும்

வீழ்ச்சியடைந்தன. கட்டில் / அறை விகிதம் 1982இன் 1.7இலிருந்து 1983இல் 1.65க்கு வீழ்ச்சியடைந்தது. எடுக்கப்பட்ட ஒவ்வொரு 100 அறைகளிலும் 165 விருந்தினர்கள் தங்கியுள்ளனர் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. தரப் படுத்தப்பட்ட வதிவிடத்துறையில் தேவையை விஞ்சிய கொள்ளளவு காணப்படு வதை நோக்கில்கொண்டு அரசு புதிய விடுதிச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப் படும் இறை ஊக்குவிப்புக்களை (வரிவிடுப்பு, கருவிகளை தீர்வையின்றி இறக்குமதி செய்தல் போன்ற) 1983 ஏப்பிரலில் இருந்து நிறுத்திக்கொண்டது. இதற்கு இசைவாக இத்துறைக்கான மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதிகளும் முதலீடு களை கட்டுப்படுத்துவதற்காக குறைக்கப்பட்டன. கலவரத்தைத் தொடர்ந்து சுற்றுலாப்போக்குவரத்தின் வீழ்ச்சியால் தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறை மிகவும் கடுமையாக பாதிப்படைந்தவேளையில் சில தங்கும் விடுதிகள் நிதி நிலைமை களின் ஆற்றலைப் பாதுகாப்பதன் பொருட்டு ஓரளவு மூடவேண்டியும் ஊழியர்களை குறைக்கவேண்டியும் இருந்தன. பல விடுதிகள் கடுமையான நிதிப் பிரச்சனைகளை எதிர்நோக்கின.

இலங்கையில் சுற்றுலாத்துறையை பழைய நிலைக்குக் கொண்டுவரும்பொருட்டு அரசு நாட்டிற்கு பயணிகளை கவர்வதற்காக வெளிநாடுகளில் பரந்தளவு விளம் பரப் பிரசாரத்தை மேற்கொள்வதன்மீது செலவிடுவதற்காக ரூ. 400 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. நடவடிக்கைகளில் வீழ்ச்சியேற்பட்டதன் விளைவால் கைத்தொழில் எதிர்நோக்கிய இடர்களை தணிக்கும் ஒரு முயற்சியாக சுற்றுலாத்துறைக்கான வியாபார விற்பனை வரிவீதத்தை 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அரசு குறைத்துக்கொண்டது. குறுகிய சந்தையை நம்பியிருப்பதைத் தவிர்ப்பதற்காக சுற்றுலாப் போக்குவரத்தின் வளத்தினை திசை திருப்புவதற்கு புதிய அபிவிருத்தி உபாயமொன்று வகுக்கப்பட்டு வருகிறது. இதுவரை இலங்கையைக் கடந்து சென்ற சந்தையின் மேல்மட்ட வருவாய் துறையினரைக் கவர்வதற்காகவும் பெருமளவு வருவாய்களை உருவாக்குகின்ற சிறப்பான ஈடுபாடுகளையும், போக்கு வரத்து உடன்படிக்கைகளையும் ஊக்குவிப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட் டுள்ளன.

## சென்மதி நிலுவை

### சென்மதி நிலுவைச் செயலாற்றம்

1983இல் வர்த்தக நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்ட துடன், தொழில்புரிவோர் பணவனுப்பல்களில் மேலும் அதிகரிப்பு ஏற்படவே சிஎஉ நியதிகளில் நடைமுறைக்கணக்குக் குறையில் கணிசமானளவு குறைப்புக் காணப்பட்டது. நடைமுறைக்கணக்குக் குறை இவ்வாண்டில் ரூ. 111,850 இலட் சம் (சிஎஉ 4,450 இலட்சம்) ஆகக் காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 1982இல் இது ரூ. 119,190 இலட்சம் (சிஎஉ 5,190 இலட்சம்) ஆகவிருந்தது. மீளாய்விற் குரிய ஆண்டில் 1982இன் பாதகமான சென்மதி நிலுவை நிலைக்கான காரணி களில் மீளாய்விற்குரிய ஆண்டில் முக்கியமானதொரு மாற்றம் ஏற்பட்டது. 1977 முதல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த வர்த்தக மாற்று விகிதம் இலங்கையின் முக்கிய பெருந்தோட்ட ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்